முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.**165/2004

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.11.2023 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.11.2023 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | A.C.P.ரத்தினசுப்ரமணியம் | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | A.C.பழனியாண்டி | கிராமம்.. | புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

9. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ரங்கநாதபிள்ளை தான் வர்த்தக சங்கத்தின் தலைவராக 1958 முதல் 1978 வரை இருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் 1975 ஆண்டின் போது அவர் தலைவர் பொறுப்பில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார் என்பதனையும் தெரிவித்துள்ளேன். வர்த்தக சங்கத்தின் சொத்தின் முழு விஸ்திரணம் 47' * 87' என்று வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் பழைய சர்வே நம்பர் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் புதிய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்தானது கதவு எண்.167E என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. 18 அடி + 29அடி + 37 அடி நீலம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன நீலத்தை கூட்டினால் 84 அடி வரும்நிலையில் சொத்தின் விஸ்திரணத்தில் 3 அடி கூடுதலாக காண்பித்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் விஸ்திரணம் எனக்கு தெரியாது என்றாலும் அந்த சொத்தானது என் பொறுப்பில் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கதவு எண்.167C என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை நான் வாடகைக்கு விட்டுவிட்டேன் என்றால் சரிதான் வாடகை பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கதவு எண்.167C மற்றும் 167D க்கு இடையில் Enterance என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. Enterance க்கு வடபுரம் D என குறிப்பிடப்பட்டுள்ளது என்ன என்றால்

கதவை குறிக்கும். இந்த கதவை திறந்தால் தான் பூராசாமி உட்சவத்தின் போது மண்டபத்தில் சாமியை வைப்பார்கள். வரைபடத்தில் ஏன் 167A என்ற கதவு எண். குறிப்பிடப்படவில்லை என்றால் அது இந்த வழக்கு சொத்துடன் சம்மந்தப்படவில்லை என்பதனால். கதவு எண்.167B இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண்.167B க்கு மேற்புரம் பட்டிசந்து உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கூடுதல் வழக்குரையில் 167C/1 என்று கதவு எண். கிடையாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மண்டபத்திற்கு மேற்புரம் உள்ள கதவு எண்.167B என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அது உண்மையில் 167A என்றாலும், பட்டிசந்துக்கு போகும் வழி என்றாலும் இல்லை.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தில் Enterance க்கு வடபுரம் D என குறிப்பிடப்பட்டுள்ளது உண்மையில் 167/C1 என்றால் இல்லை. வழக்கு சொத்தை தவிர வர்த்தகத்துக்கு சொந்தமான மற்ற சொத்துக்களில் கட்டிடங்கள் இடிந்து காணப்படுகின்றன என்றால் தற்போது தான் இடிந்து காணப்படுகின்றது, வழக்கு சொத்தும் தற்போது இடிந்து விழும் நிலைமையில் தான் உள்ளது. வழக்கு சொத்தில் ஸ்ரீராமன் என்பவர் கட்டிடங்களை சரிபார்க்க வந்தபோது நான் தடுத்துவிட்டேன் என்றால் வழக்கு நிலுவையில் இருந்ததால் தடுத்துவிட்டேன், மேலும் ஸ்ரீராமன் கட்டிங்களை சரிபார்க்கவில்லை அதனை ஒரு பாகமாக பிரித்து வாடகைக்கு விட முற்பட்டார். வழக்கு சொத்தின் கட்டிடம் தானக இடிந்து விழுந்தால் 1 ம் பிரதிவாதி ஸ்ரீராமன் அவராக வெளியேறிவிடுவார் என்பதற்காக தடுத்தேன் என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ.1 ஆவணத்தில் புதிய சர்வே எண். குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லப்படாதா புல எண். பற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் புல எண்.82/1 -ன் மொத்த விஸ்திரணம் 50 ஏக்கர் இருக்கும் நிலையில் 1990 ஆண்டிற்கு பிறகு புதிய உட்பிரிவு கொடுக்கப்பட்டுள்ளதால் அதனை வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன். கதவு எண். 167/C என்பது வழக்கு தாக்கல் செய்யும் போது யாரிடம் வாடகைக்கு விடப்பட்டது என்றால் ஜெகநாதன் ரெட்டி என்பவரிடம். சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்கு பிறகு சங்கத்தை பதிவு செய்யப்பட்ட நிலையில் அது எந்த விலாசத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் கதவு எண். 167/C .

14. கதவு எண். 167/C -ல் எங்களது சங்கம் இயங்கவில்லை என்றாலும் அதை தனி நபருக்கு வாடகைக்கு விடப்பட்டது என்றாலும் இல்லை, கதவு எண். 167/C க்கு அடுத்த வடபுரம் உள்ள மண்டபத்தில் வர்த்தக கூட்டம் நடைபெறும். கதவு எண். 167/C ல் தான் வர்த்தக கூட்டம் நடைபெறும் என்பதனை நான் தாக்கல் செய்துள்ள எந்த ஒரு

ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ள mintue book ல் குறிப்பு உள்ளது. இந்த வழக்கை நான் வர்த்தக சங்கத்தின் செயலாளர் என்ற முறையில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 அவணத்தின் படி வர்த்தக சங்கத்தின் தலைவர் அந்த சொத்தை கிரயம் பெற்று அதன் பிறகு தலைவருக்கு தான் முழு உரிமை உள்ளது போல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு சங்கத்தின் தலைவராக யார் பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்கள் தான் அதன் முழு உரிமையாளர் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri
Principal District Munsif (FAC)
Chidambaram